தின பறவை


# தணிக்கைத்துறையினர் உதவியுடன் போலி பில்கள் மூலம் லட்சக்கணக்கில் சுருட்டிய கோவை பேரூராட்சியின் செயல் அலுவலர் - ஆதாரங்களுடன்

**கோவை,**

கோவை மாவட்ட பேரூராட்சியில் பேனா, பென்சில், ஆபிஸ் கவர் வாங்க போலி பில்கள் மூலம் கோடிக்கணக்கில் செலவு செய்ததாக கணக்குக்காண்பித்திருந்ததையும் போலி பில்கள் பற்றிய ஆதாரங்களையும் நமது தினபறவை ஆகஸ்ட்டு 7 டு 13 மற்றும் ஆகஸ்ட் 28 டு செப்டம்பர் 3 இதழ்களில் விரிவாக எழுதியிருந்தோம். மேலும் வரும் இதழில் ஒரே நாளில் 10 போலி பில்களைப் போட்டு முறைகேடு செய்த பேரூராட்சி பற்றி ஆதாரங்களோடு எழுதுவதாக சொல்லி இருந்தோம்.

அதன்படி இந்தவாரம் கோவை மாவட்டம் தேர்வு நிலை பேரூராட்சியான பூலுவபட்டி பேரூராட்சியின் செயல் அலுவலராக பணிபுரிந்த திரு.சி. செல்வராஜ் அவர்கள் செய்த முறைகேடுகளைப்பற்றி விரிவாக எழுதுகிறோம்.



கோவை மாவட்டத்தின் தேர்வு நிலை அந்தஸ்த்தைப் பெற்ற பேரூராட்சி பூலுவப்பட்டி பேரூராட்சி. இந்த பேரூராட்சி சுமார் 17 சதுர கி.மீட்டர் பரப்பளவைக் கொண்டதாகும். சுமார் 20,000 மக்கள் தொகைக் கொண்டது. 15 வார்டுகளையும், 35 வீதிகளையும் உள்ளடக்கியது பூலுவப்பட்டி பேரூராட்சி. பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இப்பேரூராட்சியின் அருகிலேயே புகழ்பெற்ற ஈசா யோக மையம் அமைந்துள்ளது. வருவாய் இனம் சிறியதாக இருந்தாலும் மிகப்பெரிய அளவில் முறைகேடு நடந்துள்ளது. இந்த பேரூராட்சிக்காக மத்திய, மாநில அரசுகள் அளிக்கப்பட்ட நிதியில் பெரும்முறைகேடு செய்துள்ளார் இங்கு பணிபுரிந்த செயல் அலுவலர் திரு. சி.செல்வராஜ் (தற்போது கோவை மாவட்டம் பெரிய நெகமம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.) இந்த பூலுவப்பட்டி பேரூராட்சியில் போலி பில்கள் மூலம் செயல் அலுவலர் செல்வராஜ் லட்சக்கணக்கான ரூபாய் முறையேடு செய்துள்ளார் என்பது தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் தெரிய வந்துள்ளது. இவர் அளித்துள்ள பில்களில் பெரும்பான்மையான பில்கள் போலி என்று தெரிந்திருந்தும் எப்படி தணிக்கைத்துறை அதிகாரிகள் கண்டு கொள்ளாமல் இருந்தனர் என்பது தெரியவில்லை. செயல் அலுவலர் செல்வராஜ் செய்த முறைகேடுகளில் ஒரு சிலவற்றைப்பார்ப்போம்.

## தெருவிளக்கு பராமரிப்பிற்கு 2 ஆண்டில் 37 லட்ச ரூபாய் செலவு செய்ததாக கணக்கு



பூலுவப்பட்டி பேரூராட்சியில் மொத்தம் 35 வீதிகள் உள்ளன இந்த வீதிகளில் உள்ள தெருவிளக்குகளில் பெரும்பான்மையானவை LED பல்புகள். குறைந்த பட்சம் 3 ஆண்டுகள் கேரண்டி உள்ளவை. அப்படி இருக்கும் பட்சத்தில் இரண்டே ஆண்டுகளில் தெருவிளக்கு பராமரிப்பிற்க்காக ரூ. 37 லட்சம் செலவு செய்ததாக கணக்கு காண்பித்துள்ளார் செயல் அலுவலர் செல்வராஜ். யார் கேட்கப்போகிறார்கள் என்ற தைரியத்தில் இவ்வளவு பெரிய முறைகேட்டை சர்வ சாதாரணமாக செய்துள்ளார். செல்வராஜ் அவர்கள்.

2016-ம் ஆண்டு நிதியாண்டில் பூலுவப்பட்டி பேரூராட்சிக்கு பேனா, பென்சில், ஸ்டேஷனரிப் பொருட்கள் வாங்கியதற்க்காக செலவிடப்பட்ட தொகை என்று தணிக்கைத்துறைக்கு காண்பிக்கப்பட்ட தொகை 9 லட்சத்து 75 ஆயிரம்.

2017-ம் ஆண்டு நிதியாண்டில் பேனா, பென்சில், ஸ்டேஷனரி பொருட்கள் வாங்கியதாக பூலுவப்பட்டி பேரூராட்சிக்கு செலவிடப்பட்ட தொகை என்று தணிக்கைத்துறைக்கு காண்பிக்கப்பட்ட தொகை 8 லட்சத்து 38 ஆயிரம்.

இத்தனை சிறிய பேரூராட்சிக்கு 18 லட்ச ரூபாய்க்கு இரண்டு ஆண்டுகளில் என்ன ஸ்டேஷனரிப் பொருட்கள் வாங்கினார்கள் என்று தெரியவில்லை. இத்தகைய பில்களை எப்படி தணிக்கைத்துறை அதிகாரிகள் கண்டு கொள்ளாமல் விட்டார்கள் என்றும் தெரியவில்லை.

மேலும் இது பற்றி தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் வாயிலாக செல்வராஜ் அவர்களிடம் கேட்டதற்க்கு நமக்கு அளித்துள்ள பதிலில் 2016-ம் ஆண்டில் ரூ. 50,000-த்திற்க்கு ஸ்டேஷனரி வாங்கியதாகவும், 2017-ம் ஆண்டிற்க்கு ரூ.87,000-த்திற்க்கு ஸ்டேஷனரி பொருட்கள் வாங்கியதாகவும் பதில் அளித்துள்ளார். ஆனால் தணிக்கைத்துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள பில்களில் இரண்டு ஆண்டிற்க்கு சேர்த்து 19 லட்ச ரூபாய்க்கு ஸ்டேஷனரி வாங்கியதாக கணக்கு காண்பித்துள்ளார். இது எவ்வளவு பெரிய முறைகேடு. நினைத்தாலே தலை சுற்றுகிறது.

2016-ம் ஆண்டு நிதியாண்டில் கம்யூட்டர் மற்றும் ஆப்பரேட்டிங்கிற்க்காக செலவு செய்ததாக காண்பிக்கப்பட்ட தொகை ரூ. 2 லட்சத்து 76 ஆயிரம்.

2017-ம் ஆண்டு நிதியாண்டில் கம்யூட்டர் மற்றும் ஆப்பரேட்டிங்கிற்க்காக செலவு செய்ததாக காண்பிக்கப்பட்டுள்ள தொகை ரூ.3 லட்சத்து 87 ஆயிரம்.

இதில் என்ன கொடுமையென்றால் இந்த பூலுவப்பட்டி பேரூராட்சியில் உள்ளதோ 2 கம்யூட்டர்கள் தான். இந்த இரண்டு கம்யூட்டர்களுக்கு 2 ஆண்டில் செலவு செய்ததாக காண்பிக்கப்பட்ட தொகை ரூ.6 லட்சத்து 50,000 ஆயிரம் என்பது குறிப்பிடத்தக்கது. எப்படியெல்லாம் முறைகேடு செய்துள்ளார் செல்வராஜ் அவர்கள் என்று பாருங்கள்.

2016-ம் நிதியாண்டில் தெருவிளக்கு பராமரிப்பிற்க்காக செலவு செய்ததாக காண்பிக்கப்பட்ட தொகை 11 லட்சத்து 47 ஆயிரம் ரூபாய்.

2017-ம் நிதியாண்டில் தெருவிளக்கு பராமரிப்பிற்க்காக செலவு செய்ததாக காண்பிக்கப்பட்ட தொகை 19 லட்சத்து 84 ஆயிரம் ரூபாய்.

மொத்தம் 35 வீதிகளுக்கு தெருவிளக்கு பராமரிக்க 2 ஆண்டுகளில் 32 லட்ச ரூபாய் செலவு செய்துள்ளாராம் திரு. செல்வராஜ் செயல் அலுவலர்.

## இரண்டு கம்யூட்டர்களுக்கு 2 ஆண்டுகளில் ரூ.6 லட்சத்து 50,000 செலவு செய்ததாக கணக்கு



இரண்டே இரண்டு கம்யூட்டர்களுக்கு கம்யூட்டர் மற்றும் ஆப்பரேட்டிங் சர்வீஸ் செய்தற்க்காக 2016-ம் ஆண்டில் ரூ.2 லட்சத்து 76 ஆயிரம் ரூபாயும் 2017-ம் ஆண்டில் ரூ.3 லட்சத்து 87 ஆயிரம் ரூபாய் செலவு செய்ததாக கணக்கு காண்பித்துள்ளார். 1 ஆண்டுக்கு 5 புதிய கம்யூட்டர் வாங்கினாலும் இவ்வளவு தொகை வராது. ஆனால் சர்வீஸ் மற்றும் ஆப்பரேட்டிங்கிற்க்காக இரண்டே ஆண்டில் 6 லட்சத்து 50 ஆயிரம் செலவு செய்துள்ளார்களாம். இந்த முறைகேட்டை என்னவென்று சொல்லுவது.

## கொசு மருந்து வாங்க 1 ஆண்டில் 22 லட்சம் செலவு செய்ததாக கணக்கு



பூலுவப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட 35 வீதிகளுக்கும் சுகாதார பணிக்காக கொசுமருந்து வாங்கியதாக 2016-ம் ஆண்டிற்க்கு மட்டும் ரூ. 22 லட்சத்து 58 ஆயிரம் செலவளித்ததாக கணக்கு காண்பித்துள்ளனர். 22 லட்ச ரூபாய்க்கு சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளும் அளவிற்க்கு சுகாதாரம் மிக மோசமாக உள்ளது போலும் பூலுவப்பட்டி பேரூராட்சி. இத்தனைக்கும் அமைச்சர் வேலுமணி அவர்களின் தொகுதிக்குட்பட்டு வருகிறது இந்த பேரூராட்சி என்பது குறிப்பிடத்தக்கது.

2016-ம் நிதியாண்டில் குடிநீர் விநியோகப் பராமரிப்பிற்க்காக செலவு செய்ததாக காண்பிக்கப்பட்ட தொகை 2 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய்.

2017-ம் நிதியாண்டில் குநீர் விநியோகப் பராமரிப்பிற்க்காக செலவு செய்ததாக காண்பிக்கப்பட்ட தொகை ரூ.6 லட்சத்து 8 ஆயிரம் ரூபாய் இதற்க்காக அளிக்கப்பட்ட பெரும்பான்மையான பில்கள் போலியானவை என்பது குறிப்பிடத்தக்கது.

2016-ம் நிதியாண்டில் கொசு மருந்து மற்றும் சுகாதாரப்பொருட்கள் வாங்கியதற்க்காக 28 லட்சத்து 58 ஆயிரம் ரூபாய் செலவளித்ததாக கணக்கு காண்பித்துள்ளார். இத்தனை சிறிய பேரூராட்சிக்கு சுகாதாரப் பணிக்காக ஒரே ஆண்டில் 28 லட்ச ரூபாய் செலவளித்து கணக்கு காண்பித்துள்ளார் அதனையும் எப்படி தணிக்கைத்துறை அதிகாரிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று பாருங்கள்.

ஒரு தேர்வு நிலை பேரூராட்சியில் இத்தனை லட்ச ரூபாய் செலவு என்று கொஞ்சம் கூட கூசாமல் பில் போட்டு பெரிய தொகையை முறைகேடு செய்துள்ளார் செயல் அலுவலர் செல்வராஜ். இவரால் கொடுக்கப்பட்ட பில்களில் பெரும்பான்மையானவை போலிதான் என்று தெரிந்திருந்தும் தணிக்கைத்துறை அதிகாரிகள் எந்த ஒரு ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. ஏனெனில் பெரிய பங்கு அந்த அதிகாரிகளுக்கும் கொடுக்கப்படுகிறது போலும். ஆதலால் எந்த ஆட்சேபனையும் எழாது, பேரூராட்சிகளின் கோவை மாவட்ட உதவி இயக்குநர் என்ன செய்கிறார் என்றே தெரியவில்லை.

நாம் வெளியிடும் செய்திகள் பெரும்பாலும் வெறும் யூகத்தின் அடிப்படையில் அல்ல. தீர விசாரித்து ஆதாரங்களை அடிப்படையாகக்கொண்டே வெளியிடுகிறோம். இந்த பூலுவப்பட்டி பேரூராட்சியில் இத்தனை முறைகேடுகளையும் செய்து விட்டு தற்போது பெரிய நெகமம் பேரூராட்சிக்கு மாற்றலாகி சென்றுள்ளார் செயல் அலுவலர் செல்வராஜ். அங்கு என்ன முறைகேடு செய்ய காத்திருக்கிறாரோ.

பூலுவப்பட்டி பேரூராட்சியில் செயல் அலுவலர் செல்வராஜ் அவர்களால் நடத்தப்பட்ட முறைகேடு களைப்பற்றி ஆதாரங்களுடன் வெளியிட்டுள்ளோம். இந்த முறையாவது நடவடிக்கை எடுப்பார் நம் கோவை மாவட்ட ஆட்சியர் என்ற நம்பிக்கையில். பொருத்திருந்து பார்ப்போம்.

**செயல் அலுவலர் செல்வராஜ் அவர்கள் செய்த ஒட்டு மொத்த முறைகேடு பட்டியல் விரைவில் நமது தினபறவையில்**

## தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் கேட்கப்பட்ட கேள்விக்கு முன்னுக்குப்பின் முரணாக பதிலளித்த செயல் அலுவலர்கள்



1. பூலுவபட்டி பேரூராட்சி 2016-17 ம் ஆண்டிற்கு எழுது பொருள் வாங்கியமைக்கு ரூ.50738ம், 2017-18 ம் ஆண்டிற்கு எழுது பொருள் வாங்கியமைக்கு ரூ.86958ம் செலவிடப்பட்டுள்ளது.

| வ எண் | கோரப்பட்ட தகவல் | வழங்கப்படும் தகவல் |
| --- | --- | --- |
| 1 | 2016-2017,2017-2018 ஆகிய வருடங்களில் பேரூராட்சிகளில் மாதாந்திர மற்றும் வருடத்திற்கு ஸ்டேசனரி பொருட்கள் வாங்க எவ்வளவு தொகை செலவிடப்பட்டது? | 1. 2016-2017 – ரூ.326529<br>2. 2017-2018 – ரூ.181879 |

2016-17, 2017-18-ம் ஆண்டிற்க்கான ஸ்டேஷனரிப் பொருட்கள் வாங்கியமைக்காக செலவிடப்பட்டதாக திரு. செல்வராஜ் அவர்கள் அளித்த பதில் (22-1-19) (படம்1)

2016-17 ஸ்டேஷனரி பொருட்கள் செலவு 50738 ரூபாய்

2017-18 ஸ்டேஷனரி பொருட்கள் செலவு 86958 ரூபாய் என்று அளித்துள்ளார்.

ஆனால் தற்போதைய செயல் அலுவலர் புவனேஸ்வரி அவர்கள் நமக்கு அளித்துள்ள தகவல்கள். (படம்2)

2016-17 ஸ்டேஷனரி பொருட்கள் செலவு 326529 ரூபாய்

2017-18 ஸ்டேஷனரி பொருட்கள் செலவு 181879 ரூபாய்

ஆனால் தணிக்கைத்துறைக்கு கொடுக்கப்பட்டுள்ள கணக்கு விபரம்:

2016 -17 ஸ்டேஷனரி பொருட்கள் செலவு - 975178 ரூபாய்

2017 -18 ஸ்டேஷனரி பொருட்கள் செலவு - 838453 ரூபாய்

தகவல் அறியும் உரிமைச்சட்டம் வாயிலாக கேட்கப்பட்ட கேள்விக்கு பொய் கணக்கு காண்பித்து மிகப்பெரிய முறைகேடு செய்துள்ளார் செயல் அலுவலர் செல்வராஜ்

## தொடர்ந்து 5 நாட்களில் புத்தகங்கள் மற்றும் படிவங்கள் வாங்க 1 லட்சம் செலவு செய்ததாக கணக்கு



| | | | | |
| --- | --- | --- | --- | --- |
| 6 | 14.12.2017 | 658 | புத்தக படிவங்கள் வாங்கியதற்கு The Coimbatore District Printing பிரஸ்சுக்கு வழங்கியது. | 8838.00 |
| 7 | 15.12.2017 | 662 | புத்தகங்கள் மற்றும் படிவங்கள் சப்ளை செய்த வகையில் The Coimbatore District Printing பிரஸ்சுக்கு வழங்கியது. | 8803.00 |
| 8 | 18.12.2017 | 665 | புத்தகங்கள் மற்றும் படிவங்கள் சப்ளை செய்த வகையில் வழங்கியது. | 8850.00 |
| 9 | 20.12.2017 | 666 | புத்தகங்கள் மற்றும் படிவங்கள் சப்ளை செய்த வகையில் வழங்கியது. | 8874.00 |
| 10 | 21.12.2017 | 670 | புத்தக படிவங்கள் வாங்கியதற்கு The Coimbatore District Printing பிரஸ்சுக்கு வழங்கியது. | 8972.00 |

பூலுவபட்டி பேரூராட்சி

| | | | | |
| --- | --- | --- | --- | --- |
| | 20.03.2017 | 1053 | | 9000 |
| 14 | 20.03.2017 | 1055 | | 23972 |
| 15 | 21.03.2017 | 1059 | | 9000 |
| 16 | 23.03.2017 | 1069 | | 24650 |
| 17 | 27.03.2017 | 1086 | | 27000 |
| | | | | 326529 |

பூலுவப்பட்டி பேரூராட்சிக்கு புத்தகங்கள் மற்றும் படிவங்கள் வாங்க தொடர்ச்சியாக 5 நாட்களில் போடப்பட்ட போலி பில்களின் தொகை ரூ.1 லட்சம் 5 நாட்களுக்கே இவ்வளவு போலி பில்கள் என்றால் 1 ஆண்டில் எத்தனை போலி பில்கள் போட்டிருப்பார் இத்தனை ரூபாய்க்கு புத்தகங்கள் மற்றும் படிவங்கள் எதற்க்கு இந்த சிறிய பேரூராட்சிக்கு என்று தெரியவில்லை. போலி பில்கள் மூலம் பெரிய முறைகேடு செய்து மக்கள் வரிப்பணத்தை கொள்ளையடித்துள்ளார் செயல் அலுவலர் செல்வராஜ்

---

## சினிமாவில் நடிக்கப் போகும் எடுத்த துணை முதல்வர்

**ஆந்திரா,**

ஆந்திரமாநிலத்தில் ஜெகன் மோகன் ரெட்டி தலைமையிலான ஒ.எஸ்.ஆர்.காங்கிரஸ் ஆட்சி நடைபெற்று வருகிறது. சமீபத்தில் முதல்வர் 5 துணைமுதல்வர்களை நியமித்து அசத்தினார். இதில் ஒருவர் புஷ்பா ஸ்ரீவாணி ஆவார். இவர் பழங்குடியினர் நலத்துறை அமைச்சராகவும் உள்ளார்.

இந்நிலையில் அமைச்சர் மற்றும் துணைமுதல்வரான புஷ்பா ஸ்ரீவாணி, பக்ருதி அதிதி தேவோ பவா என்ற தயாரிப்பு நிறுவனம் தயாரிக்கவுள்ள அம்ருத பூமி என்ற படத்தில் நடிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



மேலும், இப்படம் இயற்கை மற்றும் விவசாயத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் உருவாகவுள்ளதாகவும், துணை முதல்வருடன், விழியநகரம் மாவட்ட ஆட்சியர் ஹரிஜ வஹர்லாலும் படப்பிடிப்பில் கலந்து கொண்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின்றன.

## ஆன்லைனில் அனுப்பும் பணம் உடனே வரவில்லையா? வாடிக்கையாளர்களுக்கு ரூ.100 வங்கி தர வேண்டும்

**புதுடெல்லி,**

ஆன்லைன் பணவர்த்தனை மூலம் பணம் அனுப்பி அது உரியவருக்கு போய் சேராமலேயே வங்கிகள் நமது கணக்கில் பணம் பிடித்தால் 100 ரூபாய் சேர்த்து அந்த வாடிக்கையாளருக்கு வழங்க வேண்டும் என ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ளது.

தற்போதைய டிஜிட்டல் தொழில்நுட்ப உலகில் மக்கள் பணம் அனுப்ப பெரும்பாலும் ஆன்லைன் அப்ளிகேசன்களையே நம்பி வருகின்றனர். இதற்காகவே கூகுள் பே, போன்பே, பேடிஎம் போன்ற அப்ளிகேசன்களும், வங்கிகளின் அப்ளிகேசன்களும் செயல்பட்டு வருகின்றன. சிலசமயம் இவற்றில் பணத்தை அனுப்பும்போது நமது கணக்கிலிருந்து பணத்தை எடுத்து விடுவார்கள். ஆனால் யாருக்கு அனுப்பினோமோ அவருக்கு அந்த பணம் போய் சேர்ந்திருக்காது.பிறகு




வங்கிகளுக்கு பலமுறை ஃபோன் செய்து புகார் அளித்து, அதற்கு அவர்கள் நடவடிக்கை எடுத்து பணம் கைக்கு வர மாத கணக்கில் கூட ஆகி விடுகிறது. இதனால் வாடிக்கையாளர்கள் பலர் உரிய நேரத்தில் பணம் அனுப்ப முடியாமல் தீராத மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.இந்த பிரச்சினையை போக்க ரிசர்வ் வங்கி புதிய நெறிமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி பணம் அனுப்பப்பட்ட நபருக்கு போய் சேரவில்லை என்றால் அனுப்பியவருக்கு உடனே பணத்தை திரும்ப செலுத்த வேண்டும். அதற்கு வங்கிகள் தவறும் பட்சத்தில் எத்தனை நாள் தாமதிக்கிறார்களோ அத்தனை நாளுக்கும், நாளொன்றுக்கு 100 ரூபாய் வீதம் கணக்கிட்டு கூடுதல் தொகையை பாதிக்கப்பட்டவருக்கு கொடுக்க வேண்டும்.

**ரிசர்வ் வங்கியின் அதிரடி அறிவிப்பு**

இந்த அறிவிப்பால் மக்கள் பலர் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இப்படி ஒரு திட்டம் கொண்டு வந்துள்ளதால் வங்கிகள் மக்களின் பணம் குறித்து அக்கறை காட்டும். மேலும் பணம் எடுக்கப்பட்டிருந்தால் 100 ரூபாய் கூடுதலாக தரவேண்டி இருக்கும் என்பதால் உடனடியாக திரும்ப நடவடிக்கை எடுப்பார்கள் என ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

## கால்களில் நெருப்பு பற்றியதால் தெருவில் ஓடிய மாணவன்

**மஹாராஷ்டிரா,**




சாலையோரத்தில் கிடந்த மின்சார வயரை மிதித்ததால் கல்லூரி மாணவன் கால்களில் நெருப்போடு ஓடிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மஹாராஷ்டிரா மாநிலம் நவி மும்பையில் 20 வயதுடைய சுபம் ஷோனி என்ற கல்லூரி மாணவன், தனது கல்லூரிக்கு சென்று கொண்டிருந்தார். அப்போது அங்கு சாலையில் ஒரு மின்சார வயர் வெளியே நீட்டிக்கொண்டிருந்தது.அதில் மின் கசிவு ஏற்பட்டிருந்ததாக தெரிகிறது.

சுபம் ஷோனி அந்த மின்சார வயரை தெரியாமல் மிதித்துள்ளான். அப்போது தீ பிளம்பு ஏற்பட்டு, சுபம் ஷோனியின் கால்களில் தீ பிடித்தது. இதில் பதறிப்போன மாணவன் வந்த வழியிலேயே திரும்ப ஓட்டம் எடுத்து, ஒரு டிரம்மில் இருந்த தண்ணீரால் தனது கால்களில் பிடித்திருந்த தீயை அணைத்தான். உடனே அக்கம் பக்கத்தினர் சுபம் ஷோனியை சிகிச்சைக்காக அருகிலுள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்த காட்சி அங்கிருந்த சிசிடிவி கேமராவில் பதிவாகி உள்ளது.